அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 58 - நாடகமும் அரங்கியலும்

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை.

## க.பொ.த.(உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## புள்ளியிடும் திட்டம்

## நாடகமும் அரங்கியலும் 58

நாடகமும் அரங்கியலும் பாடநெறியானது
வினாப்பத்திரம் –I, வினாப்பத்திரம் –II என இரு பத்திரங்களை உள்ளடக்கியது.
பகுதி I 40 பல்தேர்வு வினாக்களையும் பகுதி II 06 வினாக்களையும் கொண்டுள்ளது.
பகுதி I 40 வினாக்களும் கட்டாய வினாக்களாகும்.
ஒவ்வொரு வினாக்களுக்கும் 5 விடைகள் காணப்படும்.
அவற்றுள் சரியான ஒரு விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறியினுள் இட வேண்டும்.

**வினாப்பத்திரம் -I**

பகுதி - I 40 பல்தேர்வு வினாக்களுக்கும் **40 புள்ளிகள்**

பகுதி - II 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

வினாப்பத்திரம் - II

பகுதி – 1 40 பல்தேர்வு வினாக்களுக்கும் 40 புள்ளிகள்

பகுதி – 11 06 வினாக்களையுடையது.
A, B என இரு பிரிவுகளை உடையது.
பிரிவு A இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்
பிரிவு B இலிருந்து 03 வினாக்களில் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடை அளித்தல் வேண்டும். 2x15=30 புள்ளிகள்

## வினாப்பத்திரம் - I

பகுதி - I பல்தேர்வு வினாக்கள் 40 புள்ளிகள்.

பகுதி - II

| | |
|---|---|
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

# வினாப்பத்திரம் - II

பகுதி - I பல்தேர்வு வினாக்கள் 40 புள்ளிகள்.

பகுதி - II

| | |
|---|---|
| பிரிவு A | 30 புள்ளிகள் |
| பிரிவு B | 30 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளி

| | |
|---|---|
| வினாப்பத்திரம் -1 | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் -11 | 100 புள்ளிகள் |

இரு வினாப்பத்திரங்களின் புள்ளிகளையும் கூட்டி இரண்டால் வகுத்துப் பெறப்படும் புள்ளிகள் இறுதிப் புள்ளிகளாகும். 200/2 = 100 புள்ளிகள்

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................................ ✓ △ 4/5
............................................................................
............................................................................

(ii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(iii) ............................................................................ ✓ △ 3/5
............................................................................
............................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

அධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

**58 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

| பகுதி I<br>மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. "அழகைக் கண்டுபிடிப்பதும் அதனை வெளிப்படுத்துவதும் கலை" எனக் கூறிய அறிஞர்
   (1) மாஓ சேதுங்　(2) குரோசே　(3) அரவிந்தர்
   (4) அரிஸ்டோட்டில்　(5) பரதர்　(........)

2. "இந்தியக் கலையானது இந்தியாவை மட்டும் உள்ளடக்காது மக்களது மனிதப் பிரபஞ்சத்தையும் உள்ளடக்குகிறது" எனக் கூறியவர்.
   (1) ரவீந்திரநாத் தாகூர்　(2) மீனாட்சி சுந்தரனார்
   (3) இராமதாஸ் முகர்ஜி　(4) அஸ்வகோஸ்
   (5) கலாயோகி ஆனந்த குமாரசுவாமி　(........)

3. சிற்பம், மட்பாண்டம் என்பன
   (1) வரை கலைகள் ஆகும்.　(2) ஆற்றுகைக் கலைகள் ஆகும்.
   (3) வாய்ச்சொற் கலைகள் ஆகும்.　(4) குழைமைக் கலைகள் ஆகும்.
   (5) வார்ப்புக் கலைகள் ஆகும்.　(........)

4. இசை நாடகம் என்பது
   (1) ஆடலைப் பிரதானமாகக் கொண்டது.
   (2) பாடலைப் பிரதானமாகக் கொண்டது.
   (3) ஆடலையும் பாடலையும் கொண்டது.
   (4) ஒருவர் பாட இன்னொருவர் நடிப்பது.
   (5) வில்லில் அடித்துக் கதை சொல்லிப் பாடுவது.　(........)

**5.** பின்வருவனவற்றுள் அரங்கக் கலை தொடர்பான **பொருந்தாக்** கூற்று
(1) மனித உணர்வுகளுடன் தொடர்புடையது.
(2) மனிதத் திறனுடன் தொடர்புடையது.
(3) தொடர்பாடல் வன்மை மிக்கது.
(4) விம்பங்களினால் கதை சொல்வது.
(5) அழகியல் இன்பம் பயப்பது. (........)

**6.** பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக.
(அ) - காட்சிகளை ஒழுங்குபடுத்துதல்
(ஆ) - சக பார்ப்போராகச் செயற்படுதல்
(இ) - காட்சிகளை மாற்றுதல்
(ஈ) - ஒத்திகைகளை மேற்கொள்ளுதல்
(உ) - பொருட்களை வைத்தல், அப்புறப்படுத்தல்
இவற்றுள் மேடை முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, ஆ, உ
(4) அ, இ, உ (5) ஆ, இ, உ (........)

**7.** ஜப்பானிய 'நோ' நாடக மரபில் குழந்தைப் பாத்திரம் எப்பெயரால் அழைக்கப்படுகின்றது?
(1) ஷைட் (shite) (2) வக்கி (waki) (3) கிமோனா (kimona)
(4) கொகடா (kokata) (5) ஒகுனி (okuni) (........)

**8.** "சீன நாடக மரபில் நடிகர்கள் தமது பாத்திர உணர்வை வெளிப்படுத்த வேட உடையில் வர்ணங்களைப் பயன்படுத்தினர்." அவ்வகையில் பச்சை வர்ணம் குறிப்பது
(1) சிறந்த மனிதர்கள், மந்திரிகள் (2) அரச அலுவலர்கள், படை வீரர்கள்
(3) புலமையாளர்கள் (4) இளம் வயதினர்
(5) நேர்மையற்ற அரச அலுவலர்கள் (........)

**9.** கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன பற்றிக் கூறப்படும் மத்தியகால நாடகங்கள்
(1) மறைபொருள் நாடகங்களாகும். (2) அற்புத நாடகங்களாகும்.
(3) புனிதரின் நாடகங்களாகும். (4) ஒழுக்கப் பண்பு நாடகங்களாகும்.
(5) அறநெறி நாடகங்களாகும். (........)

**10.** இசை நாடகப் பாடல்களைப் பாடும்போது 'தாலாட்டு' உணர்வு வெளிப்படப் பாடும் ராகம்
(1) மோகனம் (2) முகாரி (3) நீலாம்பரி
(4) பூபாளம் (5) சிவரஞ்சனி (........)

**11.** பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக.
(அ) - மனத்தடைகள் அற்ற சூழல்
(ஆ) - சுயாதீன செயற்பாட்டிற்கு இடமளித்தல்
(இ) - கற்பனைக்கு எல்லைகள் இட்டமை
(ஈ) - அசைவுக்கேற்ப இசை
(உ) - சுயாதீன எண்ணத்திற்கான வரையறை
இவற்றுள் நடனத்தைப் படைப்பாக்கம் செய்ய துணைசெய்யும் காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடையினைத் தெரிவுசெய்க.
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, ஆ, உ
(4) அ, இ, உ (5) ஆ, இ, உ (........)

**12.** 'எந்தையும் தாயும்' நாடகத்தில் வரும் வசந்தி எனும் பாத்திரம்
(1) காஸ்யமும் அமைதியும் கொண்டது.
(2) காஸ்யமும் அவலமும் கொண்டது.
(3) பதட்டமும் அவலமும் கொண்டது.
(4) காத்திரமும் காஸ்யமும் கொண்டது.
(5) அமைதியும் பெருமையும் கொண்டது. (........)

**13.** பின்வருவனவற்றுள் கிரேக்க அரங்கில் ஒப்பனை அறையாகவும் காட்சிப் பின்னணியாகவும் பயன்பட்டது
(1) ஓர்கெஸ்ரா எனப்படும். (2) பலிபீடம் எனப்படும். (3) ஸ்கெனே எனப்படும்.
(4) எக்கிக்கிளேமா எனப்படும். (5) பெரியக்ரோய் எனப்படும். (........)

**14.** கிரேக்க நாடகக் கட்டமைப்பில் 'ஸ்ரசிமா' எனப்படுவது
(1) நாடகத்தை அறிமுகம் செய்வதாகும்.
(2) கோரஸ் ஆடுகளத்தினுள் பிரவேசிப்பதாகும்.
(3) கூட்டுப் பாடல்கள் பாடப்படுவதாகும்.
(4) கோரஸ் ஆடுகளத்திலிருந்து வெளியேறுவதாகும்.
(5) சம்பவங்கள் காட்சிகளாக நிகழ்த்தப்படுவதாகும். (........)

**15.** சமஸ்கிருத அரங்கில் முக்கோண அரங்கு என்பதனைக் குறிப்பது
(1) திரியஸ்ட் அரங்கு (2) சதுர அரங்கு (3) விகிருஸ்ட அரங்கு
(4) ஜேஸ்ட அரங்கு (5) அவர அரங்கு (........)

**16.** பின்வரும் கூற்றுக்களில் 'லோக தர்மி' பற்றிய பொருத்தமான கூற்று
(1) லலித அங்க அசைவுகளைக் கொண்டது.
(2) இயல்பான அபிநயங்களை வெளிப்படுத்துவது.
(3) நடைமுறை வாழ்விலிருந்து விலகியிருப்பது.
(4) இயல்பற்ற நடிப்பைக் கொண்டது.
(5) கற்பனை மிக்க வியப்புத் தரும் நிகழ்ச்சிகளைக் கொண்டது. (........)

**17.** வாழ்வை இலட்சிய நோக்கில் பார்க்கும் நாடகங்கள் என அழைக்கப்படுவது
(1) யதார்த்த நாடகங்கள் (2) கற்பித நாடகங்கள்
(3) மிகைப்பாட்டு வாத நாடகங்கள் (4) அபத்த நாடகங்கள்
(5) அகயதார்த்த நாடகங்கள் (........)

**18.** பின்வரும் கூற்றுக்களுள் நெறியாளர் தொடர்பான **பொருந்தாக்** கூற்று
(1) பாத்திரத்தை தெரிவு செய்வார். (2) விளம்பரங்கள் செய்வார்.
(3) ஒத்திகைகளை மேற்கொள்வார். (4) நாடக எழுத்துருவை தெரிவுசெய்வார்.
(5) நடிபாகத்தை வழங்குவார். (........)

**19.** பின்வருவனவற்றுள் ரச, கதாசிஸ், யூகென் எனப்படும் உணர்வுச் செம்மை பார்ப்போரிடத்தே தோற்றுவிக்கும் அரங்குகள் முறையே
(1) கிரேக்க அரங்கு, இந்திய அரங்கு, யப்பானிய அரங்கு
(2) இந்திய அரங்கு, சீன அரங்கு, யப்பானிய அரங்கு
(3) யப்பானிய அரங்கு. கிரேக்க அரங்கு. இந்திய அரங்கு
(4) இந்திய அரங்கு, கிரேக்க அரங்கு, யப்பானிய அரங்கு
(5) சீன அரங்கு, யப்பானிய அரங்கு, கிரேக்க அரங்கு (........)

**20.** பின்வருவனவற்றுள் கிரேக்க மகிழ்நெறி நாடகத்தின் பண்பு எனக் **கூறமுடியாதது**
(1) எளிமையான, சிக்கலான கதைச் சூழ்வைக் கொண்டமை
(2) கேலி, கிண்டல்களினூடாக அரசியலைச் சித்திரித்தமை
(3) கற்பனை அழகும் மொழிவளமும் நிறைந்தமை
(4) பாத்திரப் பண்புக்கு முக்கியமளித்தமை
(5) விதியையும் சாபத்தையும் பிரிக்க முடியாப் பண்புகளாக உள்ளடக்கியுள்ளமை (........)

**21.** 'அரங்கக் கட்டுமானம்' எனும் அரங்க நூலின் ஆசிரியர்
(1) ஜோண்சன் ராஜ்குமார் (2) பா.அகிலன் (3) கா.சிவத்தம்பி
(4) செ. செல்வகுமார் (5) க.திலகநாதன் (........)

**22.** வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் ஆகிய இரு கலைகளுக்கும் பொருத்தமான கூற்று
(1) கேட்டலால் நுகரப்படுவனவாகும்.
(2) கமராவின் உள்வாங்கலைச் சித்திரிப்பனவாகும்.
(3) நடிகரின் உணர்வுகள் துல்லியமாக வெளிப்படுவதைப் பார்ப்போரைக் காணவைப்பனவாகும்.
(4) ஓரே நேரத்தில் உலகமெங்கும் உள்ள பலரைச் சென்றடைவதாகும்.
(5) நிகழ்த்துதல் மூலமாக நடிகர்களின் குரல்களை வெளிப்படுத்துவதாகும். (........)

**23.** கீழ் வருவனவற்றுள் நடிகர்களிடத்தே தானே தோற்றம் பெறும் உணர்வு நிலை
(1) சஞ்சாரி பாவம் எனப்படும். (2) சாத்வீக பாவம் எனப்படும்.
(3) வியபிசாரி பாவம் எனப்படும். (4) ஆலம்பன பாவம் எனப்படும்.
(5) உத்வீபன பாவம் எனப்படும். (........)

**24.** கீழ் வருவனவற்றுள் வட மொழி அரங்கில் தென் மேற்கு மூலையில் சிவப்புத்தூண் அருகே அமர்ந்திருந்து பார்க்கும் பார்வையாளர்
(1) பிராமணர் (2) சத்திரியர் (3) வைசியர்
(4) சூத்திரர் (5) புலவர் (........)

**25.** பின்வருவனவற்றுள் மகேந்திர பல்லவனால் எழுதப்பட்ட மத்தவிலாச பிரகசனம்
(1) அவலச் சுவையுடையது. (2) பக்திச் சுவையுடையது.
(3) மகிழ்நெறிச் சுவையுடையது. (4) வீரச் சுவையுடையது.
(5) அங்கதச் சுவையுடையது. (........)

**26.** தமிழகத்தில் சங்ககாலத்து தைநீராடல் சடங்கு செய்யப்படுவதன் பிரதான நோக்கம்
(1) போர்க்களத்தில் வெற்றிபெறுவதற்காகும்.
(2) பேய் மகளிரை மகிழ்விப்பதற்காகும்.
(3) நல்ல கணவர் கிடைப்பதற்காகும்.
(4) நோய் குணமடைதலுக்காகும்.
(5) மழை வேண்டுதலுக்காகும். (........)

**27.** பார்ப்போரை செயல் முனைப்பானவர்களாக அரங்கில் தொழிற்பட வைத்த அகஸ்தா போவாலின் அரங்கு
(1) குரூர அரங்கு ஆகும். (2) வறுமை அரங்கு ஆகும்.
(3) சடங்கு அரங்கு ஆகும். (4) விவாதக்கள அரங்கு ஆகும்.
(5) சிகிச்சை அரங்கு ஆகும். (........)

**28.** றிச்சேர்ட் செக்னர் அவர்களால் உருவாக்கப்பட்ட அரங்கு
(1) வலிந்து தாக்கும் அரங்கு (2) வறுமை அரங்கு (3) சூழலியல் அரங்கு
(4) காவிய அரங்கு (5) உடற் பொறிமுறை அரங்கு (........)

**29.** மேல்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக
(அ) - அங்கதச் சுவையுடைய நாடகக் கதை
(ஆ) - கேலி, கிண்டலுடன் அரசியலை விமர்சிக்கும்
(இ) - வன தேவதை நாடகம் என அழைக்கப்படும்
(ஈ) - துன்பம், பயங்கரம் என்பன அடித்தள உணர்வாகக் காணப்படும்
(உ) - பாதி மனிதப் பண்பும் பாதி மிருகப்பண்பும் கொண்டது
மேற்கூறப்பட்டவற்றுள் சற்றயர் நாடக மரபுடன் தொடர்புடைய கூற்றுகளை மாத்திரம் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, ஈ (3) அ, இ, உ
(4) ஆ, இ, உ (5) ஆ, ஈ, உ (........)

**30.** வடமொழி நாடகத்தின் கதைப்பின்னலில் 'பிரகிருதி' என அழைக்கப்படுவது
(1) பலனை அடையாளப்படுத்துவதாகும்.
(2) நாடகப் பொருளுக்கு விதை போன்றதாகும்.
(3) தனக்குப் பயன் ஏதுமின்றி தலைவனின் விருப்புக்காய்க் கற்பனை செய்யப்படும் வரலாறாகும்.
(4) தலைவனின் நோக்கம் வெற்றிபெற ஒருவர் துணைபுரிவதாகக் கற்பனை செய்யப்படுவதாகும்.
(5) தலைவன் தன் குறிக்கோளை நிறைவேற்றுவதில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்வதாகும். (........)

**31.** சமஸ்கிருத நாடகக் கட்டமைப்பில் 'விரும்பிய பொருளை அடைய கதாநாயகன் முயலுதல்' எனும் அவத்தை குறிப்பது
(1) ஆரம்ப (2) பிரயத்தன (3) பிரத்தியாச (4) நியதாப்தி (5) பலாகம (........)

**32.** கிரேக்க அரங்கில் 'கிப்போ கிறைட்' என்பவனே கோரசின் தலைவன் ஆவான். இதற்கு கிரேக்கத்தில் இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. அவை
(1) பதில் சொல்பவர், வியாக்கியானிப்பவர்
(2) பாசாங்கு செய்பவர், நெறியாளர்
(3) வியாக்கியானிப்பவர், வழிப்படுத்துபவர்
(4) நடிகர், வெளிப்படுத்துனர்
(5) பதில் சொல்பவர், பாசாங்கு செய்பவர் (........)

**33.** பின்வருவனவற்றுள் நாடகம் பற்றிய பேர்னாட்ஷாவின் கூற்று,
(1) நாடகம் என்பது போலச்செய்தல்
(2) நாடகம் என்பது உலக நடைமுறைகளைப் போலச்செய்தல்
(3) நடகம் என்பது வாழ்க்கையின் ஒரு துண்டம்
(4) நாடகம் என்பது சுவைபட வந்தனவெலாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறல்
(5) நாடகம் என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தை வெளிப்படுத்துவது (........)

**34.** மேல்வருவனவற்றுள் நாவல் இலக்கியத்தின் பண்புகளிலொன்று
(1) குறைந்தளவு பாத்திரங்கள் பயன்படுத்தப்படுதல்
(2) நீண்ட கதைப்பிணைப்பு காணப்படுதல்
(3) உரையாடல்கள் மூலம் கதை நகர்த்தப்படுதல்
(4) அதிக வர்ணங்கள் அற்றதாக உணர்வுகளை மட்டும் வெளிப்படுத்துதல்
(5) யாப்பு அமைதிக்கேற்ப சொல்லும் விடயங்கள் அமைந்திருத்தல் (........)

**35.** சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் 'சோலை அழகை' எனும் பாடல் வெளிப்படுத்துவது
(1) கடவுளை வேண்டுதல் ஆகும். (2) மகிழ்தலை ஆகும்.
(3) அழுதலை ஆகும். (4) பாத்திர அறிமுகத்தை ஆகும்.
(5) காட்சிகளை வர்ணித்தலை ஆகும். (........)

**36.** இயற்பண்பு நாடக மரபின் பண்புகளில் ஒன்று **அல்லாதது**
(1) வாழ்வை உண்மையாகச் சித்திரித்தலாகும்.
(2) ஐம்புலன்களினூடாக இறுதி யதார்த்தத்தைக் கண்டுபிடித்தலாகும்.
(3) கலை தனது முறைகளில் விஞ்ஞான பூர்வமாக ஆக்கப்பெறுதலாகும்.
(4) வாழ்க்கையைத் தத்ருபமாகக் காட்டுதலாகும்.
(5) சம்பவங்கள் யதார்த்தக் குறியீட்டுக் காட்சிகளாகக் காட்டப்படுவதாகும். (........)

**37.** மேல்வரும் ஆற்றுகைகளில் கதைச்சுருக்கம் புலசந்தோராலும் சபையோராலும் சொல்லப்படும் நாடக வகை
(1) வடபாங்கு ஆகும். (2) தென்பாங்கு ஆகும்.
(3) வாசகப்பா ஆகும். (4) விலாசம் ஆகும்.
(5) டிறாமா மோடி ஆகும். (........)


**38.** மேடை முழுவதையும் ஆக்கிரமிக்கத்தக்க ஒளியைப் பிரயோகிக்கக்கூடிய ஒளி விளக்கு
(1) பொட்டொளி (2) வர்ணச்சக்கரம்
(3) ஒளி வெள்ளம் (4) அடிப்பாத ஒளிவிளக்கு
(5) கரை ஒளி (........)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் உருவாக்கப்பட்ட நடிப்புக்கோட்பாடு



(1) யதார்த்தவாதம் ஆகும்.
(2) அக யதார்த்தவாதம் ஆகும்.
(3) அபத்தம் ஆகும்.
(4) வறுமை அரங்கு ஆகும்.
(5) குரூர அரங்கு ஆகும். (........)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு,



(1) கிரேக்கத்துக்குரியது.
(2) ரோமிற்குரியது.
(3) மறுமலர்ச்சிக் காலத்துக்குரியது.
(4) எலிசபெத் காலத்துக்குரியது.
(5) மத்திய காலத்துக்குரியது. (........)

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **58**
විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும் I**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 5 | 31. | 2 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 4 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 2 | 33. | 3 |
| 04. | 2 | 14. | 3 | 24. | 2 | 34. | 2 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 5 | 35. | 5 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 3 | 36. | 5 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 4 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 1 | 19. | 4 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 5 | 30. | 3 | 40. | 5 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

* உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## உபபகுதி A

**1.** (i) நாடகக் கலை என்பது ஆற்றுகைக் கலையாகும் விதத்தினை விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) நாடகக் கதை ஆற்றப்படும் முறைமையையும் பார்ப்போரிடையே ஏற்படுத்தப்படும் தாக்கத்தையும் விளக்குக. (10 புள்ளிகள்)

**2.** பின்வரும் சிந்தனைகள் அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களை முன்வைக்குக.

(i) யதார்த்த அரங்கு

(ii) காவிய அரங்கு

(iii) வறுமை அரங்கு (3 × 5 = 15 புள்ளிகள்)

**3.** கீழே தரப்பட்டுள்ள ஆற்றுகை வெளிகள் ஒவ்வொன்றினதும் பௌதீகத் தோற்றம், ஆற்றுகை முறைமை, ஆற்றுவோர் - பார்ப்போர் உறவு என்பன பற்றி விளக்குக.

(i) வட்டக்களரி

(ii) படச்சட்ட அரங்கு

(iii) எலிசபெத்கால முன்துருத்திய அரங்கு (3 × 5 = 15 புள்ளிகள்)

## உபபகுதி B

**4.** சமஸ்கிருத அரங்கில் செவ்வக (விக்ருஸ்ட) அரங்கக் கட்டமைப்பை எடுத்துக்கூறி, அவ்வரங்கில் பார்ப்போர் பெறும் 'ரச' அனுபவங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** நீர் பார்த்த / பங்குபற்றிய பாரம்பரியக் கூத்து ஒன்றில் ஆற்றுகையாளனதும், பார்வையாளனதும் செயற்பாடுகள் பற்றி விபரிக்குக.

(15 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு வரைக.

(i) வேலன் வெறியாடல்

(ii) குளுர்த்திச் சடங்கு

(iii) காமன் கூத்து

(iv) வாசகப்பா

(v) புன்றக்கு (3 × 5 = 15 புள்ளிகள்)

* * *

# பகுதி II
## உப பகுதி A

01.

i. **நாடகக் கலையென்பது ஆற்றுகைக் கலையாகும் விதத்தினை விளக்குக.**

மேல்வரும் உள்ளுறைப் பண்புகள் காரணமாக நாடகக் கலை ஆற்றுகைக் கலையாகிறது.

- ஆற்றுவோர் ஆற்றும் போதே பார்ப்போர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.
- தாக்கமறுதாக்கம் நிகழ்கிறது. இதனால் ஆற்றுகையின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.
- கணப்பிரசன்னத்தன்மை – பார்போர் தாம் பார்த்தவற்றை மீண்டும் பார்க்கமுடியாது.
- உயிரோட்டத்தன்மை
- நாடக ஆற்றுகையில் இருந்து நடிகரைப் பிரிக்க முடியாதிருத்தல்.
- நடிகர் – பார்ப்போர் – ஆற்றுகை வெளி என அரங்க மூலக்கூறுகளின் இணைப்பாக்கம்

  (என்பதான அம்சங்களில் யாதாயினும் ஐந்தைக் குறிப்பிட்டு சிறுவிளக்கம் தந்திருந்தால்)

**(05 புள்ளிகள்)**

ii. **நாடகக் கதை ஆற்றப்படும் முறைமையையும் பார்ப்போரிடையே ஏற்படுத்தப்படும் தாக்கத்தையும் விளக்குக.**

நாடகக் கதையின் ஆற்றுகை முறைமை மேல்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்

- எழுத்துரு அன்றேல் கதைக்கான எண்ணம் idea
- வெவ்வேறு நாடக வகைகள் வேறுபட்ட ஆற்றுகை முறைமைகளைக் கொண்டிருக்கின்றன.
- நாடகமோடி ஆற்றுகையின் முறைமையைத் தீர்மானிக்கிறது.
- ஆற்றுகை முறைமை சொல்லாடல் சார்ந்தா? பாடல் வழிப்பட்டதா அன்றேல் ஊமச்சித்திரிப்பா?
- ஆற்றப்பெறும் அரங்கவெளி சார்ந்த ஆற்றுகைமுறைமை படச்சட்ட மேடை வட்டக்களரி, சமதள அரங்கு.
- மருட்கை அரங்கமுறை, பட்டறை அரங்கமுறை, சமூகக்குழு அரங்க முறை, தெருவெளி அரங்கமுறை
- அரங்கக்கூறுகளின் இணைப்பாக்கமுறைமை போன்றதும் மற்றும் பிறவுமான ஆற்றுகைமுறைகளை வெளிப்படுத்தும் விடைகளைப் பரிசீலிக்குக. ஆற்றுகை முறை மாறும் போது அது பார்போரிடத்தில் ஏறபடுத்தும் தககவிளைவுளைக் குறிப்பிடுதல் வேண்டும்

  எடுத்துக்காட்டாக :

  அ. உணர்ச்சிகளின் வெளிப்பாடு / கதாசிஸ்

  ஆ. பதிற்குறிகளை வெளிப்படுத்தல்

  இ. மருட்கை விளைவு (மௌனப் பார்வையாளர்)

  ஈ. பார்வை – நடிகராதல் – விவாதித்தல், ஆற்றுகையின் போக்கை மாற்றுதல்ஈ ஆற்றுகையில் பங்கு கொண்டு நடித்தல்

  உ. கூத்தில் சேர்ந்து பாடுதல்

  மற்றும் பிற ஆற்றுகை முறைமைகள் ஐந்து குறிப்பிட்டிருப்பின் **05 புள்ளிகள்**

  பார்போரிடத்தில் ஏற்படுத்தும் தாக்கம் 5 குறிப்பிட்டிருப்பின் **05 புள்ளிகள்**

**குறிப்பு :** பரீட்சார்த்திகள் யாராயினும் ஒரு நாடகக் கதையைக் குறிப்பிட்டு அது ஆற்றப்படும் விதத்தையும் அதனைப் பார்ப்போரிடத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தையும் குறிப்பிட்டிருந்தாலும் பரிசீலித்துப் புள்ளி வழங்கலாம்

**(5 X 2 = 10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**02. பின்வரும் சிந்தனைகள் அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களை முன்வைக்குக**

i. **யதார்த்த அரங்கு.**

- 19ம் நூற்றாண்டில் ஹென்றிக் இப்சன், அன்ரன் செக்கோவ் போன்றோரால் முன்னெடுக்கப்பட்ட அரங்கு.
- மனோரதிய கற்பிதவாதச் சிந்தனைகளை நிராகரித்து உண்மையான வாழ்வியல் அம்சங்களை இரத்தமும் சதையுமாக அதிக உண்மைத் தன்மையுடன் வெளிப்படுத்தியமை.
- வாழ்கைச் சம்பவங்களிலிருந்து தெரிவு, தொகுப்பு வியாக்கியானம் என்பனவற்றுக்கு இடமளித்தமை.
- பாத்திரவாக்கம், அசைவியக்கம், விதானிப்புக்கள் அனைத்திலும் யதார்த்தப் பண்பு வெளிப்படும் வகையில் கவனம் செலுத்தப்படும் முறை.

**போன்ற விடயங்கள் விடையில் எதிர்பார்க்கப்பெறுகின்றது.**

**(05 புள்ளிகள்)**

ii. **காவிய அரங்கு.**

- பேட்டோல்ட் பிறெக்ட் அவர்களால் உருவாக்கப்பட்டது.
- ஆசிய நடிப்பு மரபுகளின் சாயலைப் பெற்றதாக மோடிமைப்படுத்தப்பட்ட நடிப்பு இயல்புகள் பயன்படுத்தப்படல்
- கதைகூறல் / எடுத்துரைக்கும் பண்பைக் கொண்டதாகவும், நடிகர்கள் அரங்கில் பாத்திரமாக வாழாது செய்துகாட்டல் முறைமை மூலம் தொடர்புகொள்ளும் விதம்
- பார்போரை அரங்கின் நிலைமைகளில் ஒன்றிவிடாது புறவயமாக நின்று விமர்சிக்கும் முறைமைக்கான அந்நியப்படுத்தல் / பாரதீனப்படுத்தல் உத்திகளை அறிமுகம் செய்தமை.
- கதை சம்பவக் கோர்வையினைக் கொண்டதாக நேர்கோட்டுத்தன்மையில் அமையாது பேணிய முறைமை
- பார்போரை விமர்சிக்கும் விழிப்புணர்வூட்டும் ஆற்றல் கொண்டவர்களை அரங்குடன் இணைக்கும் முறைமை

**இவை போன்ற விடயங்கள் விடையில் எதிர்பார்க்கப்படுகின்றது.**

**(05 புள்ளிகள்)**

iii. **வறுமை அரங்கு.**

- போலந்து நாட்டைச் சேர்ந்த ஜேர்சி குறோட்டொவ்ஸ்கி அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது.
- வறுமை அரங்கு எளிமை அரங்கு எனவும் சொல்லப்படுகின்றது.
- அரங்க மூலங்களில் நடிகனின் திறமைக்கே முக்கியத்துவம் கொடுத்து நாடகத்தினை நிகழ்த்திக் காட்டினார்.
- நடிகர் ஒரு யோகியாக அரங்கில் வாழவேணடும் என வலியுறுத்தினர்.
  உ.தா: நடிகனின் நடிப்பானது நாடகத்தைப் பார்ப்போர் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டுதலாக அமைய வேண்டும் என்று பரீட்சித்துக் காட்டினர்.

**( இவை போன்ற விடயங்கள் இருப்பின் புள்ளிகள் வழங்குக )**

**(05 புள்ளிகள்)**

**03. கீழே தரப்பட்டுள்ள ஆற்றுகை வெளிகள் ஒவ்வொன்றினதும் பௌதிகத் தோற்றம், ஆற்றுகை முறைமை, ஆற்றுவோர் - பார்ப்போர் உறவு என்பன பற்றி விளக்குக**

i. **வட்டக்களரி -**

i. பௌதிகத் தோற்றம்

- பாரம்பரியமான கூத்து ஆற்றுகைகள் இடம்பெறும் வெளியாகும்
- வட்டக்களரி கூத்து ஆற்றுகைகள் ஆடப்பெறும் வெளியாகும்
- நவீன அரங்க முயற்சிகள் ஆற்றுவோர் – பார்ப்போர் தொடர்பாடலும் பௌதிகத் தோற்றத்தின் இயல்புகள் காரணமாகவும் பயன்படுத்துகின்ற முறைமை.

  படங்கள் மூலம் எடுத்துக்காட்டு உதாரணங்கள் மூலம் விளக்கம் செய்யப்பட்டிருப்பின் முழுமையான புள்ளிகள் வழுங்கப் பெறும்.

ii. ஆற்றுகை முறைமை

- கூத்து ஆற்றுகைகள் இரவில் ஆடப்பெறுவதாகவும், பார்ப்போர் வெளியைச் சுற்றி அமர்ந்திருப்பதாகவும் சிறிய காட்சிப் பொருட்கள், திரைகள் பயன்படுத்தப்படுவதாகவும் அமையும் முறைமை
- ஆற்றுவோர் பார்ப்போருக்கூடாகவும், இருசாராரும் பங்குகொண்டு ஆற்றுகைகளை நிகழ்த்துவதாகவும் நவீன நாடக ஆற்றுகைகள் அமைகின்றமை

iii. ஆற்றுவோர் – பார்போர் ஊடாட்டம்

- கூத்து ஆற்றுகைகளின் நிகழ்த்துகை முறைமையில் பார்போர் ஒவ்வொரு கட்டத்திலும் பங்குகொள்ளும் முறை (ஆற்றுகை ஆற்றுகையின் முன், ஆற்றுகையின் பின்)

  உ_தா: காசுமாலை போடல், காசு கொடுத்தல், தெருவெளி நாடகங்கள் போன்றவற்றில் வட்டக்களரியின் ஆற்றுகை வெளி தொடர்பில் சாத்தியமான பல அம்சங்களையும் உள்வாங்கிய முறைமை

(05 புள்ளிகள்)

ii. படச்சட்ட அரங்கு -

பௌதிகத் தோற்றம்

- இத்தாலிய மரபினூடாக வருகை தந்த வடிவமாகும்.
- ஆற்றுவோர் – பார்ப்போருக்கிடையில் நான்காவது சுவரைக் கொண்டது.(Fourth wall Theory)
- அரங்க மருட்கையை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆற்றுகை வெளியும், பார்வையாளர் பகுதியும் பிரிக்கப்பட்டிருத்தல்.
- பல்வகைத் திரைகளின் பயன்பாடு இருத்தல்

  உ_தா: பக்கத்திரை, முன்திரை, வான்திரை
- பிரதான அரங்கு 9 பிரிவுகளாகப் பிரிக்கப்படும், ஆற்றுகைச் செயற்பாடுகளுக்காக இவ்வாறு பிரித்து நோக்கப்படுவது உண்டு

ஆற்றுகை முறை

- ஒரு பக்கப் பார்வையாளரை மையப்படுத்தியதாக ஆற்றுகையின் செயலியக்கங்கள் அமையும்
- ஆற்றுகையின் போது மருட்கையை ஏற்படுத்தும் வகையில் அரங்க மூலங்களைப் பயன்படுத்தினர்.

  உ_தா: திரை, காட்சி விதானிப்பு, ஒளியமைப்பு
- நடிகர்கள் ஆற்றுகையின் போது மறைவாக இருப்பதற்கு பக்கத்திரைகளும் அரங்கோடு இணைந்த ஒப்பனை அறைகளும் பயன்படும்.

ஆற்றுவோர் பார்ப்போர் உறவு

- நடிகர் பார்ப்போர் உறவு வட்டக்களரியை விடக் குறைந்ததாக இருத்தல்.
- ஆற்றுவோர் பார்போர் உறவு இடைத்தூரம் பௌதிக நிலையில் அண்மித்து இருந்த போதிலும் ஆற்றுவோர் பார்ப்போர் இடைவெளி அதிகமாக இருக்கும்.
- பார்ப்போரின் சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் இதனால் பதிற்குறிகள் இறுக்கமானதாக இருக்கும்
- அரங்கு கொடுக்கும் மருட்கையினால் பார்ப்போர் பெரும்பாலும் ஆற்றுகையுடன் ஒன்றித்தவர்களாக இருப்பார்கள் (05 புள்ளிகள்)

iii. எலிசபெத் முன்துருத்திய அரங்கு

பௌதீக தோற்றம்

- அரங்கு மூன்று தளங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும்
- பிரதான மேடை ஏப்ரன் (முன் துருத்திய) அமைப்பாக இருக்கும்
- மேடை நான்கு பகுதிகளாக உள்ளன
  1. பிரதான மேடை
  2. உள்ளக மேடை
  3. மேல்மேடை
  4. திரை (கண்டுபிடித்தல் வெளி)
- கூரையில்லாத பரந்த வெளியில் மூன்று தளங்களைக் கொண்டதாக அமையும்
- முன்துருத்திய பகுதி நிலத்திலிருந்து 4 அடி - 6அடி உயரமானதாக இருக்கும்
- உள்ளரங்கிற்கு மேலே உள்ள அரங்கிற்குச் செல்வதற்கு படிக்கட்டுக்கள் இருக்கும்
- மேடையின் இருபுற வாசலுக்கு நேரே இரு யன்னல்கள் காணப்படும்
- மூன்றாவது தளத்தில் இசைவல்லுனர்கள் இருப்பர். (01 புள்ளிகள்)

ஆற்றுகை முறைமை

- பெரும்பாலும் மாலை நேரங்களில் ஆற்றுகை நிகழும்
- அரங்கின் பின்னால் உள்ள உள்ளரங்கின் ஊடாக உள்வருவார் இப்பகுதியில் இரு கதவுகள் காணப்படுவதனால் நடிகர் உள்நுழைவதற்கு ஒரு கதவும் வெளியேறுவதற்கு ஒரு கதவும் பயன்படுத்தப்படும்.
- ஒரே நேரத்தில் பல காட்சிகள் இடம்பெறுவதற்கு மூன்று தளங்களும் பயன்படுத்தப்பட்டன.
- அரங்க மருட்கையைத் தோற்றுவிப்பதற்கு பொறிவாயில்கள் நெருப்பு, புகையை ஏற்படுத்த பொறிகள், கப்பிகள், மணிகள், பீரங்கி வேட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன.
- இரவுக் காட்சிகளைக் காட்டுவதற்கு பந்தம் விளக்கு மெழுகுதிரி பயன்படுத்தப்பட்டன.
- சண்டைகள், ஊர்வலங்கள், நடனங்கள் ஊடாக பெருங்காட்சிப் பண்பு கொண்டு வரப்பட்டன.

(02 புள்ளிகள்)

ஆற்றுவோர் - பார்போர் உறவு

- ஆற்றுவோர் - பார்போர் ஊடாட்டம் காணப்படும்.
- கீழ்த்தளத்தில் சாதாரண பார்வையாளர்கள் நின்று பார்ப்பார்கள்
- 2ஆம், 3ஆம் தளப் பார்வையாளருக்கான பல்கனியில் வசதி படைத்தவர்கள் முன்பதிவு செய்து இருந்து பார்ப்பார்கள்.

- அரச மற்றும் தளப் பகுதிகளின் கதைகள் காணப்படுவதை மக்கள் ஆர்வத்துடன் பார்ப்பதில் ஈடுபட்டனர் **(02 புள்ளிகள்)**

**(03 x 05 = 15 புள்ளிகள்)**

## உப பகுதி B

**04. சமஸ்கிருத அரங்கில் செவ்வக (விக்ருஸ்ட) அரங்கக் கட்டமைப்பை எடுத்துக்கூறி, அவ்வரங்கில் பார்போர் பெறும் 'ரச' அனுபவங்களை உதாரணத்துடன் விளக்குக.**

64 அடி நீளமும் 32 அடி அகலமும் கொண்டது.

32 x 32 அடி நீள அகலம் கொண்டது ரங்கமண்டலம் - பார்வையாளர்கூடம்

8 x 16 அடி நீள அகலம் கொண்டது ரங்கபீடம் - ஆற்றுகைப் பகுதி

8 x 32 அடி நீள அகலம் ரங்கசீர்ஷம் - இசைஞர்கள் அமருமிடம்

8 x 32 அடி நீள அகலம் நேபத்தியகம் - ஒப்பனைக் கூடம்

ரங்கபீடத்தின் இருபுறம் 8 x 8 அடி நீள அகலம் கொண்ட மத்தவராணி

பார்போர் கூடத்தில் நால்வகை வர்ணத்தாரும் அமர நான்கு தூண்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு வரும் தமக்கென ஒதுக்கப்பட்ட தூண்களில் அமர்வர்.

**(படம் வரைந்து குறித்திருப்பின் 05 புள்ளிகள் வழங்கலாம்)**

ரசம் பற்றிய விளக்கம்

பரதர் கூறிய வரைவிலக்கணம்

"விபாவ அனுபாவ வியபிச்சாரிபாவ ஸம்யோகாத் ரஸநிஸ்பத்திஹி"

பார்வையாளர் சகிர்தயன் அதாவது ஒத்த மனத்தினன் என்பன கூறப்பட்டிருப்பின் 02 புள்ளி வழங்க கருதுக **(02 புள்ளிகள்)**

பார்போர் எவ்வாறு ரசனுபவம் பெறுவர் என 08 ரசமும் உதாரணம் கூறி விளக்கியிருப்பின் 08 புள்ளிகள் வழங்கக்கருதுக

உ.தா: ஸ்தாயிபவாத்திலைவிபாவம் தூண்ட அனுபாவம் தோன்றும் அனுபாவத்துடன் வியபிச்சாரிபாவம் இணைய ரசம் தோன்றும். ஸ்தாயிபாவம் நிலையான பாவம் விபாவம் - ஆலம்பனவிபாவம் - கதாபாத்திரங்கள் துஷ்யந்தன் / சகுந்தலையிடம் ஏற்படும் / உருவாக்கும் செயல்கள் இதன்போது "ரதி" எனும் ஸ்தாயி மேற்கிளம்பும். இந்நிலையில் நடிகரின் மனத்துடன் பார்போரின் உணர்வு இணைகின்ற போது சிருங்கார ரசம் தோன்றும்

**(15 புள்ளிகள்)**

**05. நீர் பார்த்த / பங்குபற்றி பாரம்பரியக் கூத்து ஒன்றில் ஆற்றுகையாளனதும், பார்வையாளனதும், செயற்பாடுகள் பற்றி விபரிக்குக.**

- கூத்து ஆற்றுகை சமூகத்தின் பெருவிழாவாக நிகழ்த்தப்படுவதனால் ஆற்றுவோருக்கும் பார்போருக்குமிடையே நெருக்கமாக தொடர்பு உண்டு என்பதைக் குறிப்பிடல்.
- கூத்தைத் தெரிவு செய்வதிலிருந்து கூத்தைப் பழக்கி அரங்கேற்றும் வரைக்கும் ஊர்முழுவதும் இணைந்து பங்குபற்றும் கலைவடிவமாக உள்ளதால் ஆற்றுவோருக்கும், பார்வையாளருக்குமிடையே தொடர்புண்டு என்பதைக் குறிப்பிட்டு இருப்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

- மேற்குறிப்பிட்ட ஆற்றுவோர் பார்போருக்கான செயற்பாடானது
  - ஆற்றுகைக்கு முன்னரும்
  - ஆற்றுகையின் போதும்
  - ஆற்றுகையின் பின்னரும்

முன்னெடுக்கப்படுவதனைக் குறிப்பிடல்

உதாரணம் : (1) ஆற்றுகையாளர்களில் ஒருவரான கூத்தர் செயற்பாடு, பாத்திரம் ஏற்றல், ஆடல், பாடல்களை மனனம் செய்தல், ஆட்டக்கோலங்களை வெளிப்படுத்தல், அரங்கில் ஆடுதல், ஆடிப்பாடி பார்போருடன் ஊடாடல்

**( கூத்தர் போன்று ஏனைய கலைஞர்களைக் குறிப்பிட்டிருப்பின் கவனிக்குக )**

உதாரணம் : (2) பார்வையாளர் செயற்பாடு உணர்வுரீதியான செயற்பாடு சிரித்தல், மகிழ்தல், சேர்ந்து பாடுதல், உத்தர்கள் தவறும் பட்சத்தில் அடி எடுத்துக்கொடுத்தல் பௌதிக ரீதியான செயற்பாடு உடை அணிவித்தல், ஒப்பனை செய்தல், திரைபிடித்தல், வெடிகொழுத்துதல், எண்ணெயிடுதல், பூமாலை, காசுமாலை, அணிவித்தல், சால்வை காட்டல் ....... **(15 புள்ளிகள்)**

**06. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு வரைக**

i. **வேலன் வெறியாடல்**

- சங்க காலத்தில் குறிஞ்சிநில மக்களிடம் வெறியாட்டு எனும் கூத்து வழக்கில் இருந்தது.
- தலைமகள் களவொழுக்கம் நிகழ்த்தும் காலத்தில் தலைவனைக் காணாது தலைவி உடல் மெலிவாள் தலைவியின் தாய் முருகன் கோயில் பூசாரி வேலனை அழைத்து தலைவியின் நோய்க்குரிய காரணத்தை வினவுவாள் இதற்கு குறிஞ்சி நிலத்தெய்வம் முருகனே காரணமாதலால் விழா எடுத்தால் தலைவியின் நோய் தீருமென்று கூறி வேலன் முருகனை வழிபடுவர் இதன்போது பூசாரி வேலனாக மாறி ஆடுவதையே வேலன் வெறியாட்டு என அழைக்கின்றனர்.
- இது நிகழும் இடம் ' வெறியாடு களம்' என அழைக்கப்பட்டது.
- பழங்கால பேயோட்டும் ஒரு முறையாக பார்க்கப்படுகிறது.
- வேலன் வெறியாட்டு பற்றிக் கூறும் இலக்கியங்களாக - திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை
- இதில் காணப்படும் நாடகப் பண்புகளை எடுத்துக் கூறுவர்.

**(05 புள்ளிகள்)**

ii. **குளுர்த்திச் சடங்கு**

- கண்ணகி அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்காகும்
- இச் சடங்கானது வைகாசித் திங்களில் (பௌர்ணமியில்) நிகழ்த்தப்படும்.
- இச்சடங்கரங்க நிகழ்வுகள் கதவு திறத்தலுடன் ஆரம்பித்து கதவு அடைத்தலுடன் நிறைவு பெறும்
- இதன் நிகழ்வுகளாக
  1. கதவு திறத்தல்
  2. கன்னிக்கால் வெட்டுதல்
  3. கல்யாணச் சடங்கு
  4. குளுத்திப் பாடல்
  5. நேர்த்திக்கடன்
  6. கதவடைத்தல் என்பன தொடர்புபட்டதாக இருக்கும்

- குளுர்த்தியின் ஐதிகம்

  மதுரையை அழித்த கண்ணகி தீ வடிவமாய் சேரநாட்டின் பறம்புமலையை அடைந்ததைக் கண்ட மக்கள் குரவை பாடி அம்மனின் கோபத்தைத் தீர்த்தனர். அப்போது தேவர்கள் ஆசீர்வதிக்க மழை பொழிந்தது இன்றும் குளுர்த்தி பாடி முடிந்ததும் அல்லது பாடும்போது மழை பெய்வது வழக்கம்
- இச்சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகள் கூறப்படலாம்.

(05 புள்ளிகள்)

iii. காமன் கூத்து

- மலையகப் பெருந் தோட்டங்களில் ஆடப்பட்டு வரும் பாரம்பரியக் கூத்துகளுள் ஒன்று
- காமன் வழிபாட்டுடன் தொடர்புடையது.
- காமனாகிய மன்மதன், ரதியின் கதையினைக் கூறுவது.
- மன்மதன், ரதி, சிவன், பிரம்மா, இந்திரன், வீரபத்திரன், தூதுவன், வெட்டியான், வெட்டிச்சி, குறத்தி போன்ற பாத்திரங்கள் இடம்பெறும்
- சிவன் மன்மதனை எரித்தலும், ரதி சிவன் ஊடாக மன்மதனை உயிர்ப்பித்தலுமான கதை நிகழ்த்திக் காட்டப்படும். (05 புள்ளிகள்)

iv. வாசகப்பா

- ஈழத்தமிழ் அரங்கில் மன்னாரப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்ற நாடக வடிவத்துள் வாசகப்பாவும் ஒன்றாகும்
- 'வாசகப்பா' என்றால் வசனம் கலந்த பாட்டு என்பது பொருளாகும்.
- ஆங்கிலேயர் தமது மதம் பரப்புக் கொள்கைக்காகத் தாம் கூறவந்த கருத்தினை மக்களிடம் இலகுவாகக் கொண்டு செல்வதற்காக வசனம் கலந்த பாடலுக்கூடாக ஒரு நாடக முறையாகக் கையாண்டதன் விளைவாகத் தோன்றியதே 'வாசகப்பா' ஆகும்.

  உ.தா: தேவகசாயம்பிள்ளை வாசகப்பா
- வாசகப்பாவினை 'இராகதை' எனவும் அழைக்கும் மரபும் உண்டு (05 புள்ளிகள்)

V. புன்றகு

- யப்பானிய நாடக மரபுகளுள் ஒன்றாகும்.
- புன்றகு நாடக அளிக்கைகள் பெரும்பாலும் யப்பானிய 'கபுகி' நாடக மரபில் இருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்களை ஆற்றுகை செய்வனவாக அமையும்.
- இது பாவை அரங்கம் / பொம்மலாட்ட அரங்க வகையைச் சார்ந்தது.
- புன்றகு அரங்கில் மூவகை ஆற்றுவோர் தொழிற்படுவர்
  1. பொம்மைகளை இயக்குவோர்
  2. ஓதுவோர் / பாடுவோர்
  3. சம்சன் பிளேயர்ஸ்
- பெரும்பாலான புன்றக்கு ஆற்றுகைகளை சிங்கமற்சு மொன்சேமன் என்பவர் எழுதியுள்ளார்.
- இவர் யப்பானின் சேக்ஸ்பியர் எனவும் அழைக்கப்படுவார்
- பொம்மைகளைக் கொண்டு புன்றகு நிகழ்த்தப்பட்டதனால் – பொம்மைகளின் அசைவுக்குப் பின்னணிக் குரல் கொடுக்கும் கலைஞர் பாலினம் மற்றும் எல்லா வயதினரையும் பிரநிதித்துவப்படுத்தும் வகையில் குரல் வெளிப்பாடுகளின் மாறுபட்ட திறமைகள் கொண்டதாக இருக்க வேண்டும்.
- புன்றகு கதைகளில் உன்னதமான சோக காதல் கதைகள், வீர புனைவுகள் மற்றும் வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள் பிரபலமாக உள்ளன (05 புள்ளிகள்)

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

**58 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

| பகுதி I | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

சுட்டெண் : ..........................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், அதனை பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
※ பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
※ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. ஒரு நாடகத்தின் கதைப் பின்னல் என்பது
   (1) சம்பவங்களின் நிரல் ஒழுங்கு ஆகும்.
   (2) பாத்திரங்கள் ஒன்றுக்கொன்று பேசிக்கொள்வது ஆகும்.
   (3) நேர் எதிர் நிலைகள் தமக்குள் முரண்பட்டுக் கொள்வது ஆகும்.
   (4) நாடகம் பற்றிய விளக்கக் குறிப்புக்கள் ஆகும்.
   (5) நாடகம் பேசுகின்ற பிரதான பொருள் ஆகும். (........)

2. "நாடகம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும், பழக்கவழக்கங்களைக் காட்டும் கண்ணாடி ஆகும்." எனக் கூறியவர்
   (1) கிலே பிராண்ட (2) ஜே.ஜே.தொம்சன் (3) லூடர்ஸ்
   (4) கொரேஸ் (5) அலடைஸ் நிக்கொல் (........)

3. ருக்மணி அருண்டேல் அவர்கட்கு பெயரீட்டிக் கொடுத்த கலைவடிவம்
   (1) இசை (2) நடனம் (3) பேச்சு
   (4) வில்லிசை (5) நாடகம் (........)

4. 'ஈடிப்பஸ்' நாடகத்தில் வரும் 'தைரீசியஸ்' எனும் பாத்திரம் ஒரு
   (1) தூதன் (2) போர்வீரன் (3) செய்தியாளன் (4) தீர்க்கதரிசி (5) காவலாளி (........)

5. முன்துருத்திய அரங்கில் நாடகங்களை நடாத்திய அரங்கு மரபு
   (1) கிரேக்க அரங்கு ஆகும். (2) ரோம அரங்கு ஆகும்.
   (3) இந்திய அரங்கு ஆகும். (4) எலிசபெத் அரங்கு ஆகும்.
   (5) மறுமலர்ச்சிக் கால அரங்கு ஆகும். (........)

6. கிரேக்க அரங்கில் மூன்றாவது நடிகனை இணைத்த நாடக ஆசிரியர்
(1) தெஸ்பிஸ் (2) ஈஸ்கலஸ் (3) சோபோகிலிஸ்
(4) மெனாண்டர் (5) யூறிப்பிடீஸ் (........)

7. மேல்வரும் கூற்றுக்களுள் கிரேக்க மகிழ்நெறியின் தோற்றம் பற்றிய **பொருந்தாக் கூற்று**
(1) லெனேய் விழாவிலிருந்து தோன்றியது.
(2) பலிக் பாடல்களிலிருந்து தோன்றியது.
(3) டித்திறாம் பாடல்களிலிருந்து தோன்றியது.
(4) இலிங்கப் பாடல்களிலிருந்து தோன்றியது.
(5) கோமஸ் நிகழ்ச்சியிலிருந்து தோன்றியது. (........)

8. சங்க இலக்கியத்திற் கூறப்படும் பெண்பாற் கலைஞர்களுள் இருவர்
(1) மாதவி, மாதரி (2) கணிகையர், ஐயை
(3) பதியிலார், தளியிலார் (4) பாடினி, விறலி
(5) சதுரிமாணிக்கம், தளிச்சேரிப் பெண்கள் (........)

9. பின்வருவனவற்றுள் 'ஹமாசியா' எனும் கிரேக்கச் சொல்லின் பொருள்
(1) மூன்றன் ஒருமை நிலை என்பதாகும். (2) குறிதவறு என்பதாகும்.
(3) உணர்ச்சிச் செப்பம் என்பதாகும். (4) தூய்மைப்பாடு என்பதாகும்.
(5) வெளியேற்றம் என்பதாகும். (........)

10. சமஸ்கிருத அரங்க மரபில் 'ரங்க பீடம்' குறிப்பது
(1) வேடப் புனைவிடம் ஆகும். (2) பார்ப்போர் கூடம் ஆகும்.
(3) ஆடல் அரங்கு ஆகும். (4) காட்சித் தளம் ஆகும்.
(5) இளைப்பாறுமிடம் ஆகும். (........)

11. 'பண்ணை' என்பதைப் பிரதான ஆற்றுகை இடமாகக் குறிக்கும் இலக்கியம்
(1) தொல்காப்பியம் ஆகும். (2) சிலப்பதிகாரம் ஆகும். (3) பரிபாடல் ஆகும்.
(4) கலித்தொகை ஆகும். (5) திருக்குறள் ஆகும். (........)

12. காட்சிச் சோடனை மாற்றங்களை நாடக உருவாக்கத்தில் உயிராகக் கொண்டு கண்ணுக்கு விருந்தளித்த நாடகக் கலைஞர்
(1) சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். (2) எஸ்.ஜி.கிட்டப்பா ஆவார்.
(3) நவாப் இராசமாணிக்கம் ஆவார். (4) சம்பந்த முதலியார் ஆவார்.
(5) கந்தசாமி முதலியார் ஆவார். (........)

13. இராம நாடகம், கீசகன் வதை போன்ற நாடகங்கள்
(1) வடமோடிக்குரியன. (2) தென்மோடிக்குரியன. (3) வடபாங்குக்குரியன.
(4) தென்பாங்குக்குரியன. (5) முல்லை மோடிக்குரியன. (........)

14. மன்னார் மரபில் தென்பாங்கு நாடக வகையின் இயல்புகளுள் ஒன்று
(1) யாழ்ப்பாணத்திலிருந்து சென்றமை
(2) காட்சித் திரைகள் பயன்படுத்தப்பட்டமை
(3) மாதோட்டத்திற்குரியமை
(4) கடவுள் வாழ்த்து விருத்தத்தில் அமைந்துள்ளமை
(5) அரச பாத்திரம் செங்கோலுடன் வருகை தந்தமை (........)

15. பின்வருவனவற்றுள் வடபுலத்திற்கு பொதுவானதும் யாழ்ப்பாணத்திற்குச் சிறப்பாகவும் உள்ள கூத்து
(1) வேடன் பறி (2) நாட்டை (3) வாசகப்பா
(4) காத்தவராயன் (5) மகிடி (........)

16. 'பசியால் உடல் மெலிந்தேன் - கொஞ்சம் ருசியாய் அமுதளிப்பாய்...' எனும் பாடல் பெறும் இசைநாடகம்
(1) நல்ல தங்காள் (2) பக்த நந்தனார் (3) ஸ்ரீ வள்ளி
(4) பூதத்தம்பி (5) அரிச்சந்திரா (........)

17. பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்க.
(அ) - சிவன் மன்மதனை எரித்தல்
(ஆ) - மத்தளம் இசைக்கருவியாகப் பயன்படுத்தப்படல்
(இ) - மாசி மாதம் நிகழ்த்தப்படுவது
(ஈ) - கோயில் முற்றம் அரங்காகப் பயன்படுத்தப்படுவது
(உ) - சொற்கட்டுக்கள் அதிகளவிற் பயன்படுத்தப்படுவது
மேற்குறிப்பிட்டவற்றுள் காமன் கூத்துப்பற்றிய சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, இ, ஈ
(4) அ, ஈ, உ (5) ஆ, ஈ, உ (........)

18. "இப்போ தந்தையின் குருதி சிந்தி விட்டவன், தாயின் புருசன் இதுவே என் பெயர்" எனும் ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வரும் இக்கூற்றுக்குரிய பாத்திரம்
(1) லேயஸ் (2) அன்ரிகனி (3) கிரையோன்
(4) ஈடிப்பஸ் (5) பொசிபஸ் (........)

19. 'இராவணேசன்' நாடகத்தில் அந்நாடக மோதுகையைத் தோற்றுவிக்கும் பாடல் வரிகள் பின்வருவனவற்றுள் எது?
(1) 'அனுப்பினேன் வீரரெல்லாம் அனைவரும் இறந்தார் ஐயோ...'
(2) 'யுத்தம் வந்தால் பகைமைகள் பரவும் குரோதம் கௌவும்...'
(3) 'இன்று போய் போர்க்கு நாளை வா...'
(4) 'போரை என்றும் பெண்கள் நாங்கள் ஏற்கோம் எங்கள் புருசர் பிள்ளைகள்...'
(5) 'துன்றிடும் பெண்ணை விட்டு தொழுது வாழ்...' (........)

20. மேல்வரும் நாடகங்களுள் இப்சனால் எழுதப்படாதது
(1) சமூகத்தின் தூண்கள் (2) பேய்கள் (3) செரிப்பழத்தோட்டம்
(4) மக்களின் எதிரிகள் (5) தலைமைக் கட்டடக்காரன் (........)

21. பராக்கிரம நிரியெல்ல அவர்களால் எழுதப்பட்டு விமல் சாமிநாதன் அவர்களால் தமிழில் ஆக்கப்பட்ட அரங்க நூல்
(1) சிங்கள அரங்கப் பாரம்பரியம் (2) சிங்கள நாடக வரலாறு
(3) சிங்கள நாடகக் கலை ஆளுமைகள் (4) சிங்கள பாரம்பரிய அரங்கு
(5) சிங்கள நாட்டார் அரங்கு (........)

22. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மாணிக்க மாலை நாடகம் ஒரு
(1) சுய ஆக்க நாடகமாகும். (2) வரலாற்று நாடகமாகும். (3) சமூக நாடகமாகும்.
(4) அரசியல் நாடகமாகும். (5) தழுவல் நாடகமாகும். (........)

23. பின்வருவனவற்றுள் சங்காரம் நாடகத்தின் வடிவமும் உள்ளடக்கமும் அமைந்து காணப்படுவது
(1) கூத்து வடிவமும் பரத நாட்டியமும் இணைக்கப்பட்டமை
(2) காத்தவராயன் கூத்து வடிவமும் புராதனக் கதையும் இணைக்கப்பட்டமை
(3) கூத்தின் ஆடலும் நவீன கதையும் இணைக்கப்பட்டமை
(4) கூத்தின் வடிவத்துள் புதிய உள்ளடக்கமும் சமகாலக் கதைகளும் இணைக்கப்பட்டமை
(5) நாட்டிய நாடக வடிவமும் சமகாலக் கதைகளும் இணைக்கப்பட்டமை (........)

24. இ. முருகையன், அ.ந.கந்தசாமி, சொக்கன் ஆகியோரால் எழுதப்பட்ட நாடகங்கள் முறையே
(1) அந்தஸ்து, மானிடம் என்பது புல்லோ, குரங்குகள்
(2) வெறியாட்டு, மதமாற்றம், இரட்டை வேசம்
(3) ஐயா லெக்சன் கேட்கிறார், தகுதி, மேற்பூச்சு
(4) யாருக்காக அழுதான், தணியாத தாகம், தவிப்பு
(5) பொய்க்கால், முற்றிற்று, மாருதப்புரவீகவல்லி (........)

25. மாதவி ஆடிய ஆடல்களிலே 'மல்லாடல்'
(1) சிவன் திரிபுரத்தை எரித்த கதையாகும்.
(2) முருகன் அவுணரை வென்று ஆடியதாகும்.
(3) கண்ணன் மற்போர் செய்து அவுணரைக் கொன்றதாகும்.
(4) முருகன் கடலின் நடுவே சூரபதுமனை அழித்து ஆடியதாகும்.
(5) மாயவன் மரக்கால் கொண்டு ஆடியதாகும். (........)

**17.** பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்க.
(அ) - சிவன் மன்மதனை எரித்தல்
(ஆ) - மத்தளம் இசைக்கருவியாகப் பயன்படுத்தப்படல்
(இ) - மாசி மாதம் நிகழ்த்தப்படுவது
(ஈ) - கோயில் முற்றம் அரங்காகப் பயன்படுத்தப்படுவது
(உ) - சொற்கட்டுக்கள் அதிகளவிற் பயன்படுத்தப்படுவது
மேற்குறிப்பிட்டவற்றுள் காமன் கூத்துப்பற்றிய சரியான கூற்றுகளை மாத்திரம் உள்ளடக்கிய தெரிவு
(1) அ, ஆ, இ (2) அ, ஆ, உ (3) அ, இ, ஈ
(4) அ, ஈ, உ (5) ஆ, ஈ, உ (........)

**18.** "இப்போ தந்தையின் குருதி சிந்தி விட்டவன், தாயின் புருசன் இதுவே என் பெயர்" எனும் ஈடிப்பஸ் மன்னன் நாடகத்தில் வரும் இக்கூற்றுக்குரிய பாத்திரம்
(1) லேயஸ் (2) அன்ரிகனி (3) கிரையோன்
(4) ஈடிப்பஸ் (5) பொசிபஸ் (........)

**19.** 'இராவணேசன்' நாடகத்தில் அந்நாடக மோதுகையைத் தோற்றுவிக்கும் பாடல் வரிகள் பின்வருவனவற்றுள் எது?
(1) 'அனுப்பினேன் வீரரெல்லாம் அனைவரும் இறந்தார் ஐயோ...'
(2) 'யுத்தம் வந்தால் பகைமைகள் பரவும் குரோதம் கௌவும்...'
(3) 'இன்று போய் போர்க்கு நாளை வா...'
(4) 'போரை என்றும் பெண்கள் நாங்கள் ஏற்றோம் எங்கள் புருசர் பிள்ளைகள்...'
(5) 'துன்றிடும் பெண்ணை விட்டு தொழுது வாழ்...' (........)

**20.** மேல்வரும் நாடகங்களுள் இப்சனால் எழுதப்படாதது
(1) சமூகத்தின் தூண்கள் (2) பேய்கள் (3) செரிப்பழத்தோட்டம்
(4) மக்களின் எதிரிகள் (5) தலைமைக் கட்டடக்காரன் (........)

**21.** பராக்கிரம நிரியெல்ல அவர்களால் எழுதப்பட்டு விமல் சாமிநாதன் அவர்களால் தமிழில் ஆக்கப்பட்ட அரங்க நூல்
(1) சிங்கள அரங்கப் பாரம்பரியம் (2) சிங்கள நாடக வரலாறு
(3) சிங்கள நாடகக் கலை ஆளுமைகள் (4) சிங்கள பாரம்பரிய அரங்கு
(5) சிங்கள நாட்டார் அரங்கு (........)

**22.** பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மாணிக்க மாலை நாடகம் ஒரு
(1) சுய ஆக்க நாடகமாகும். (2) வரலாற்று நாடகமாகும். (3) சமூக நாடகமாகும்.
(4) அரசியல் நாடகமாகும். (5) தழுவல் நாடகமாகும். (........)

**23.** பின்வருவனவற்றுள் சங்காரம் நாடகத்தின் வடிவமும் உள்ளடக்கமும் அமைந்து காணப்படுவது
(1) கூத்து வடிவமும் பரத நாட்டியமும் இணைக்கப்பட்டமை
(2) காத்தவராயன் கூத்து வடிவமும் புராதனக் கதையும் இணைக்கப்பட்டமை
(3) கூத்தின் ஆடலும் நவீன கதையும் இணைக்கப்பட்டமை
(4) கூத்தின் வடிவத்துள் புதிய உள்ளடக்கமும் சமகாலக் கதைகளும் இணைக்கப்பட்டமை
(5) நாட்டிய நாடக வடிவமும் சமகாலக் கதைகளும் இணைக்கப்பட்டமை (........)

**24.** இ. முருகையன், அ.ந.கந்தசாமி, சொக்கன் ஆகியோரால் எழுதப்பட்ட நாடகங்கள் முறையே
(1) அந்தஸ்து, மானிடம் என்பது புல்லோ, குரங்குகள்
(2) வெறியாட்டு, மதமாற்றம், இரட்டை வேசம்
(3) ஐயா லெக்சன் கேட்கிறார், தகுதி, மேற்பூச்சு
(4) யாருக்காக அழுதான், தணியாத தாகம், தவிப்பு
(5) பொய்க்கால், முற்றிற்று, மாருதப்புரவீகவல்லி (........)

**25.** மாதவி ஆடிய ஆடல்களிலே 'மல்லாடல்'
(1) சிவன் திரிபுரத்தை எரித்த கதையாகும்.
(2) முருகன் அவுணரை வென்று ஆடியதாகும்.
(3) கண்ணன் மற்போர் செய்து அவுணரைக் கொன்றதாகும்.
(4) முருகன் கடலின் நடுவே சூரபதுமனை அழித்து ஆடியதாகும்.
(5) மாயவன் மரக்கால் கொண்டு ஆடியதாகும். (........)

**26.** பின்வருவனவற்றுள் பேட்டோல்ற் பிறெக்டின் அரங்க நடிப்பு முறை எனக் கருதப்படுவது
(1) அந்நியமாதல் (2) உடற்பொறிமுறை
(3) யதார்த்தம் (4) இயல்பு நெறி
(5) அபத்தம் (........)

**27.** "சீன ஒபேறா நிகழ்த்துகையில் வகை மாதிரிப்பாத்திரம் பிரதானமாக பங்கு கொள்ளும் என்பர்" அவற்றுள் கோமாளிப் பாத்திரம் குறிப்பது
(1) செங் (2) டான் (3) ஜிங் (4) செள (5) வக்கி (........)

**28.** மேல்வரும் கூற்றுக்களுள் 'கிங்லியர்' நாடகம் பற்றிய **தவறான கூற்று**
(1) உண்மைக்கும் போலிக்குமிடையே மோதுகை சித்திரிக்கப்பட்டமை
(2) மூன்று கருக்களைக் கொண்டமை
(3) பரிபக்குவமுற்ற புனைவு காதல் நாடகமாகப் படைக்கப்பட்டமை
(4) இரட்டைக் கதைச் சூழ்வைக் கொண்டமை
(5) தனியதிகாரம் கொண்ட லியர் மன்னனின் கதை சொல்லப்பட்டமை (........)

**29.** சிங்கள 'கோலம்' நாடகம் பற்றிய சரியான கூற்று
(1) இலங்கையின் மலைநாட்டுப் பகுதிகளில் ஆடப்படுவதாகும்.
(2) குருநான்சே என்பவரால் ஆரம்பித்து வைக்கப்படுவதாகும்.
(3) தானயம்பல வை அரங்க வெளியாகக் கொண்டமைக்கப்படுவதாகும்.
(4) சுகப்பிரசவம் வேண்டியும் குழந்தைவரம் வேண்டியும் நிகழ்த்தப்படுவதாகும்.
(5) பருத்தி வளர்த்தல், நூல் நூற்றல் போன்ற செயல்கள் பிரதான இடம் வகிப்பதாகம். (........)

**30.** பின்வரும் ஜப்பானிய நாடகங்களுள் விகடத்தன்மையுடைய நாடக மரபு
(1) நோ (2) கபுக்கி (3) கோவாக்கா (4) கியோஜென் (5) புன்ரக்கு (........)

**31.** பின்வரும் கூற்றுக்களுள் நூர்த்தி நாடக மரபின் வீழ்ச்சிக்கான காரணங்களில் ஒன்று **அல்லாதது**
(1) வெவ்வேறு பண்பாடுகளின் கலப்பு அம்சங்கள் அடங்கியிருந்தமை
(2) பொருத்தமற்ற பாடல்களை அதிகமாகப் பயன்படுத்தியமை
(3) பொருத்தமற்ற காட்சிகள் உருவாக்கப்பட்டமை
(4) சமூக சீர்திருத்தக் கதைகள் உள்ளடக்கப்பட்டமை
(5) நாடகக் கலையை விட பாடலே மேலோங்கியிருந்தமை (........)

**32.** ஜப்பானிய நோ நாடக மரபில் அமைந்த தொல்சீர் காலப் போர்வீரர் பற்றிய நாடக வகை
(1) வக்கி நோ (2) சுரம நோ (3) கசுரமொ நோ
(4) கிரி நோ (5) கென்சை மொநோ (........)

**33.** சிங்கள 'கொகம்ப கங்காரிய' எனும் சடங்கரங்கில் 'கொகம்ப' என்பது குறிப்பது
(1) பாதி மனிதன் பாதி கடவுள் (2) பாதி பிசாசு பாதி மனிதன்
(3) பாதி கடவுள் பாதி பிசாசு (4) பாதி மிருகம் பாதி கடவுள்
(5) பாதி மனிதன் பாதி பிசாசு (........)

**34.** பின்வரும் கூற்றுக்களை அவதானித்து விடையளிக்குக.
பூசாரி - சொல்லு, எந்தப் பேய் உன்னைப் பிடித்தது?
பேய் - மஹா சோகனா
பூசாரி - ஏன் இந்த மனிதரைப் பிடித்தாய்?
பேய் - எனக்குத் தராமல் இவன் குறிப்பிட்ட உணவைச் சாப்பிட்டான்
மேற்படி உரையாடல் குறிக்கும் சிங்களச் சடங்கரங்கு
(1) ரட்டயக்கும (2) சன்னியக்கும (3) தொவில்
(4) ஊறுயக்கும (5) மகாசம்பத (........)

**35.** '1990 களில் மேடையேற்றப்பட்ட 'எந்தையும் தாயும்' நாடகம் பேசும் விடயப் பொருள்
(1) வர்க்கப் பிரச்சினை (2) சாதிப் பிரச்சினை
(3) உளவியற் பிரச்சினை (4) அரசியற் பிரச்சினை
(5) வேலையில்லாப் பிரச்சினை (........)

**36.** மேல்வரும் கூற்றுக்களுள் நாடக அரங்கக் கல்லூரி பற்றிய **தவறான கூற்று** எது?
(1) 'அரங்கம்' எனும் சஞ்சிகையை வெளியிட்டது.
(2) 1978 இல் தாபிக்கப்பட்டது.
(3) யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டது.
(4) குழந்தை சண்முகலிங்கம் அவர்களால் தொடங்கப்பட்டது.
(5) மொழி பெயர்ப்பு நாடகங்களில் அதிக கவனம் செலுத்தியது. (........)

**37.** பின்வரும் கூற்றுக்களைக் கவனிக்குக
(அ) - கவிதை நாடகங்களை எழுதினார்.
(ஆ) - உயிர்த்த மனிதர் கூத்து, பொய்க்கால் போன்றன இவரின் சிறந்த நாடகங்களாகக் கருதப்பட்டன.
(இ) - 1970 களில் சிறந்த நாடகாசிரியர் ஆவார்.
இவற்றுக்குரியவர் பின்வருவோருள்
(1) து. உருத்திரமூர்த்தி (2) அம்பி (3) இ. முருகையன்
(4) முல்லை மணி (5) நீலாவணன் (........)


**38.** ஜப்பானிய கபுக்கி நாடகங்களில் ஆண் பாத்திரங்கள் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டன
(1) ஒன்னகத (2) ஒத்தொகொன (3) அசுரா
(4) ஒக்குனி (5) எயாமி (........)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளவரால் எழுதப்பட்ட நாடகம்
(1) பேய்கள்
(2) ஒத்தல்லோ
(3) தலைவர்
(4) வெண்கட்டிவட்டம்
(5) தாய்



(........)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கு குறிப்பது
(1) கிரேக்க அரங்கு
(2) ரோம அரங்கு
(3) எலிசபெத் அரங்கு
(4) சீன அரங்கு
(5) ஜப்பானிய அரங்கு



(........)

❋❋

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **58**

විෂයය / பாடம்: **நாடகமும் அரங்கியலும் II**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 3 | 31. | 4 |
| 02. | 5 | 12. | 3 | 22. | 5 | 32. | 2 |
| 03. | 2 | 13. | 1 | 23. | 4 | 33. | 3 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 3 | 35. | 3 |
| 06. | 3 | 16. | 3 | 26. | 1 | 36. | 5 |
| 07. | 3 | 17. | 3 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 4 | 18. | 4 | 28. | 3 | 38. | 2 |
| 09. | 2 | 19. | 5 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 4 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ உபபகுதி **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் உபபகுதி **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### உபபகுதி A

**1.** காளிதாசரது நாடகங்களுள் சிறந்த நாடகமாக அபிக்ஞான சாகுந்தலம் விளங்குகிறது

(i) 'அபிக்ஞான சாகுந்தலம்' நாடகத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பத்தை எடுத்துரைக்குக. (03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நாடகத்தில் வரும் உமக்குப் பிடித்த பாத்திரங்களை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இந்நாடகத்தின் கரு, மோடி, விடயப்பொருள் என்பவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

**2.** இப்சனைப் பற்றிய கணிப்பின்போது அவர் 'பிரச்சினை நாடகங்களை' எழுதினார் எனக் கூறுவர்

(i) 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் அடித்தளமாக உள்ள பிரச்சினை யாது? விளக்குக. (05 புள்ளிகள்)

(ii) 'நோறா' இப்பிரச்சினையை சித்திரிப்பதற்கும் வலுவுடன் எடுத்துக் கூறுவதற்கும் இப்பாத்திரம் எவ்வாறு பயன்படுகின்றது என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

**3.** இராவணேசன் நாடகத்தினை வாசிப்பதனூடாகவும் பாடல்களை நயப்பதனூடாகவும் அந்நாடகத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம்

(i) இராவணேசன் நாடகத்தில் வரும் இந்திரஜித், கும்பகர்ணன் ஆகிய பாத்திரங்களின் இயல்புகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) இராவணேசன் நாடகத்தை விளங்கிக் கொள்ள அதன் அரங்கக் கூறுகள் எவ்வகையில் உதவுகின்றன? (05 புள்ளிகள்)

(iii) இந்நாடகத்தில் காணப்படுகின்ற வடமோடிக் கூத்தின் பண்புகள் பற்றிக் கருத்துரைக்க. (06 புள்ளிகள்)

### உபபகுதி B

**4.** "அரிஸ்டோட்டில் திறஜெடியை கவிதையின் சிறந்த வடிவங்களில் ஒன்றாகக் கொள்வார்." அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி திறஜெடி நாடகத்தின் பண்புகள் யாவை என 'சோபோகிலிசின் ஈடிப்பஸ்' நாடகத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (15 புள்ளிகள்)

**5.** "இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பல்கலைக்கழகத்துக்கு முக்கிய இடம் உண்டெனினும் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்த நிறுவனங்கள் ஆற்றிய பணிகளும் முக்கியமானவையாகும்." இக்கூற்றினை விளக்குக. (15 புள்ளிகள்)

6. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு வரைக.
(i) சரச்சந்திராவின் அரங்கப்பணிகள்
(ii) பார்சி நாடக மரபு
(iii) தெருவெளி அரங்கு
(iv) கலையரசின் நாடக முறைமை
(v) கபுக்கி அரங்கு (3 × 5 = 15 புள்ளிகள்)

***

பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களையும்
பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து,
எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி II
## பிரிவு A

**01. அபிக்ஞான சாகுந்தலம் நாடகத்தின் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பத்தை எடுத்துரைக்குக.**

i. **'அபிக்ஞான சாகுந்தலம், நாடகத்தில் மோதுகை வெளிப்படும் சந்தர்ப்பத்தை எடுத்துரைக்குக.**

- காதலுக்கும் சாபத்திற்கும் இடையே எழுந்த எதிர் எதிர் நிலைகளே மோதுகையாக அமைதல்.
- நல்வினைக்கும் தீவினைக்கும் இடையிலான விளைவுகள் இம்மோதுகைகள் வெளிப்படும் சந்தர்ப்பங்கள் .
- துருவாச முனிவர் சகுந்தலையை நோக்கிச் சாபமிடுதல்
- சகுந்தலையை துக்ஷ்யந்தன் ஏற்றுக் கொள்ள மறுக்கும் சந்தர்ப்பம்.
- சகுந்தலையை ஆச்சிரமத்தினர் திரும்ப அழைத்துச் செல்ல மறுக்கும் தருணம்.

**(03 புள்ளிகள்)**

ii. மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நாடகத்தில் வரும் உமக்குப் பிடித்த பாத்திரங்களை விவரிக்குக

- பாத்திரங்கள் இரண்டினைக் குறிப்பிடுதல்
- மேலே குறிப்பிட்ட பாத்திரங்கள் உமக்குப் பிடித்தமைக்கான காரணங்கள் யாவை?
- அவற்றின் பாத்திரவாக்கமுறை யாது என நீர் கண்டு கொண்டீர்?
- பாத்திர மோதுகை எவ்வாறு வெளிப்பட்டுள்ளது.
- பாத்திரங்கள் ஏற்றுக் கொண்ட சவால்களும் / நெருக்கடிகளும் யாவை ? பாத்திரங்கள் எவ்வாறு அவற்றை வெற்றி கொண்டன?

**( போன்ற விடயங்களை அவதானித்து புள்ளி வழங்கவும் )**

**(06 புள்ளிகள்)**

iii. **இந்நாடகத்தின் கரு, மோடி, விடயப்பொருள் என்பவற்றை விளக்குக**

கரு -துஸ்யந்தன் சகுந்தலைக்குமிடையேயான காதல் **(02 புள்ளிகள்)**

மோடி- லோகதர்மி, நாட்டியதர்மி எனும் இரண்டு பண்புகளையும் கொண்டுள்ளது

எடுத்துக்காட்டாக – துஸயந்தன் தேரில் செல்லல் – நாட்டியதர்மி

உரையாடல்- உன் உடம்பின் உறுப்புக்கள் வருந்தந் தனிந்தகவா?

சகுந்தலை – சிறிதாய் நலமுண்டாகி வருகின்றது **(02 புள்ளிகள்)**

விடயப்பொருள்

திருமண பந்தம் எந்தச் சந்தர்ப்பத்திலும் காப்பாற்றப்பட வேண்டியதாகும் **(02 புள்ளிகள் )**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**02. இப்சனைப் பற்றிய கணிப்பின்போது அவர் 'பிரச்சினை நாடகங்களை' எழுதினார் எனக் கூறுவர்**

i. **'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் அடித்தளமாக உள்ள பிரச்சினை யாது விளக்குக.**

- நோறா– ஹெல்மர் கணவர் – மனைவி இப்பாத்திரங்ளுக்கு இடையில் புரிந்துணர்வின்மை அடிப்படையில் காணப்படுவதே
  குடும்ப அமைப்பின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்ற முறைமை.
- 'வீடு"– ஹெல்மரைப் பொறுத்தவரையில் தனது ஆண் அதிகாரத்தைப் பேணுவதற்கான குறியீட்டுக்களமாக அமைந்திருக்கும் விதம்
- சூழல் – மனிதரை மனிதப்பண்புகளை நிர்ணயம் செய்யும் முறைமை
  மேற்படி விடயங்கள் நாடகச்சம்பவங்களில் வளர்தெடுக்கப்படும் முறைமையினை எடுத்துகாட்டுக்களுடன் சுட்டிப்பாக்க குறிப்பிடப்பட்டிருத்தல் எதிர்பார்க்கப் பெறுகின்றது. **(05 புள்ளிகள் )**

ii. **'நோறா' இப்பிரச்சினையை சித்திரிப்பதற்கும் வலுவுடன் எடுத்துக் கூறுவதற்கும் இப்பாத்திரம் எவ்வாறு பயன்படுகின்றது.**

- நோறாவின் நேர்மையான, கடுமையான உழைப்புக்கள் அவளின் ஒவ்வொரு செயலும் ஹெல்மரால விளங்கிக் கொள்ளப்படும் அல்லது பார்ககப்படும் முறைமை.
- நோறாவைக் ஹெல்மர் பயன்படுத்திய கையாளும் விதம் ஹொல்மரின் எதிர்பார்ப்பு
- தனக்காக் இதுவரை நோறா வாழவில்லை இன்னொருவரின் விருப்பை நிறைவேற்றும் வெறும் பொம்மையாக வாழ்ந்து முடித்துள்ள வாழ்க்கை முறை.
- எதிரும் புதிருமாக விவாதிக்கும் தேவைப்பாட்டிற்கு நோறா வழிப்படுத்தப்படும் விதம்.
- நோறா தீர்மானங்களை உறுதியாக எடுத்துக் கொள்ளும் திறன்
  ( மேற்படி விடயங்கள் நாடக எடுத்துருவினூடாக எடுத்துக்காட்டுக்களுடன் வீளக்கம் தருவது எதிர்பார்க்கப் பெறுகின்றது)

**(10 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

**03. இராவணேசன் நாடகத்தினை வாசிப்பதனூடாகவும் பாடல்களை நயப்பதனூடாகவும் அந்நாடகத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.**

i. **இராவணேசன் நாடகத்தில் வரும் இந்திரஜித், கும்பகர்ணன் ஆகிய பாத்திரங்களின் இயல்புகளைக் குறிப்பிடுக.**

- இந்திரஜித்
  - இராவணனின் மகன்
  - பிறப்பில் சிறந்த வீரன்
  - மாயப் போர் செய்பவன்
  - யதார்த்தவாதி
  - தனது தாய் தந்தை மீது அதிக பாசம் உடையவன். **(02 புள்ளிகள்)**

கும்பகர்ணன்:-

- சிறந்த வீரன்
- இராவணின் தம்பி
- நன்றி மறவாவன்
- ஓர் நியாயவாதி

**(02 புள்ளிகள்)**

**(04 புள்ளிகள்)**

ii. **இராவணேசன் நாடகத்தை விளங்கிக் கொள்ள அதன் அரங்கக் கூறுகள் எவ்வகையில் உதவுகின்றன?**

- பாடல்கள் (தாளக்கட்டுகள்)
- பாத்திரங்கள் (உணர்ச்சிகள்)
- சொல்லாடல்கள் (விருத்தம் , தரு ......)
- இசை, ஆடல்
- வாத்திய ஒலிகள்
- அசைவுகள்
- முகபாவங்கள், சைகைகள்

(அளிக்கை முறைமை என்பன கருத்திற் கொண்டு விடை அளித்திருப்பின் கவனித்துப் புள்ளிகள் வழங்குக.)

**(05 புள்ளிகள்)**

iii. **இந்நாடகத்தில் காணப்படுகின்ற வடிமோடிக் கூத்தின் பண்புகள் பற்றிக் கருத்துரைக்க.**

- மட்டக்களப்பு வடமோடி தாள மெட்டுகளில் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மட்டக்களப்பு வடமோடி தாளக்கட்டுக்கள் கையாளப்பட்டுள்ளன.
- மட்டக்களப்பு வடமோடி ஆட்டக் கோலங்கள்.

  உதாரணம்:- கொலு வரவு தாளம், வீசானம், உலா, பொடியடி
- போர் வீரர் வரவு, சண்டைக் காட்சிகளுக்கு வீரியமான தாளக்கட்டுக்கள் பாவிக்கப்பட்டுள்ளன.
- அஃறிணைப் பாத்திரங்களுக்கான தாளக் கோலங்கள்.

  உதாரணம் - குதிரை
- காப்பு விருத்தம், பாத்திர வரவு பாடலின் உரையாடல் தன்மை, வாழிபாடி முடித்தல் பாணியில் நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது.
- விருத்தம், தரு, தகவல், கந்தார்த்தம் என்ற பாவினங்கள் பயன்படுத்தப்படல்

(இவை போன்ற விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றன) **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

## பிரிவு B

**04. "அரிஸ்ரோட்டில் திறஜெடியை கவிதையின் சிறந்த வடிவங்களில் ஒன்றாகக் கொள்வர்." அரிஸ்ரோட்டலின் கருத்துப்படி திறஜெடி நாடகத்தின் பண்புகள் யாவை என 'ஈடிபஸ்'**

- அரிஸ்டோட்டிலின் திறஜெடிக்குரிய பண்புகளை இனம் கண்டு குறிப்பிடல்
- தெய்வங்களுக்கும் மனிதனுக்குமிடையில் உள்ள முரண் கூறப்படுவது
- மனிதனும் விதியும் சாபமும் பிரிக்க முடியாத பிணைப்பு உடையன.
- துன்பம், பயங்கரம் என்பனவற்றை அடித்தள உணர்வாகக் கொண்டிருத்தல்.
- துன்பம் மலிந்த வாழ்வை துணிவோடு வாழும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தும் என்பதை வெளிப்படுத்தல்.
- பாயிரத்துடன் ஆரம்பித்து வெளியேறுகையுடன் நிறைவு பெறுவதற்கான கட்டமைப்பைக் கொண்டிருத்தல்
- நாடகம் முழுவதிலும் விரவிக்கிடக்கும் பீதி , கழிவிரக்கம் ஆகிய உணர்ச்சிகள் வெளிப்படல்
- கதைப்பின்னல், பாத்திரம் ,சொல்லாடல் ,சிந்தனை, இசை, பெருங்காட்சி ஆகிய கூறுகளை தம்மகத்தே கொண்டிருத்தல்.
- நலமாந்த ஒன்று பாழ்பட்டுப்போவதற்கான அவலத்தவறு ஒன்று இழையோடியிருத்தல்
- கூட்டு சமூக பண்பை வெளிப்படுத்தும் கோரஸ் பிரதான பங்கு வகித்தல்

**( மேற்கூறப்பட்ட பொருத்தமான பண்புகள் அவலச்சுவை நாடகத்துக்கான பண்புகளாக எடுத்துக்கூறல்)**

**(05 புள்ளிகள்)**

ஈடிபஸ் நாடகத்தில் வெளிப்படும் முறைமைக்கு உதாரணம் காட்டல்.

உதாரணம் :-

- ஈடிபஸ் விதியிலிருந்து தப்பித்துகொள்ள முடியாத நிலை
- மனித வாழ்வின் நிகழ்வுகள் யாவும் தெய்வ சித்தமாகும் ஈடிபஸ் கொரிந்திய நாட்டிலிருந்து தப்பியோடிய போதிலும் ஈற்றில் விதிவழி வகுத்த பழிகேட்டுக்கு ஆழாதல்.
- தனது தாயுடனே மனைவியாக மகிழ்ந்து இதுவரை வாழ்ந்துள்ளேனே என ஈடிபஸ் இரங்கி நிற்றல்
- 'தான் பெற்ற மகனையே திருமணம் செய்து அவனுடையே இன்புற்று மகிழ்ந்து குழந்தை பெற்றெடுத்தேனே....." என நினைத்து யொகஸ்ரா மனம் புலம்பி தற்கொலை செய்தல்

**(நாடக் எழுத்துருவின் ஊடாக அவலச் சுவை நாடகப் பண்புகள் வெளிப்படும் முறையினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் தரப்படுமிடத்து முழுமையான புள்ளிகள் வழங்கப் பெறும்)** **(10 புள்ளிகள் )**

**(15 புள்ளிகள்)**

**05. "இலங்கை தமிழ் அரங்க வளர்சியில் பல்கலைக்கழகத்துக்கு முக்கிய இடம் உண்டெனினும் பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்த நிறுவனங்கள் ஆற்றிய பணிகளும் முக்கியமானவை"இக் கூற்றினை விளக்குக.**

- இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பங்களிப்புச் செய்தல்.
  கொழும்பு பல்கலைக்கழகம்,
  வித்தியலங்கார வளாகம்,
  கட்டுப்பெத்த வளாகம்,
  பேராதனை, யாழ்ப்பாண, கிழக்குப் பல்கலைக் கழகங்களின்
- அரங்கச் செயற்பாடுகள்
- நாடகக் கல்விசார் நடவடிக்கைகள்
- நவீன அரங்கப் போககில் ஏற்படுத்திய திருப்பு முனைகள்
- ஆற்றுவகை முறைமைகள்
- பல்கலைக்கழகத்திற்கு வெளியே நாடக அரங்கக்கல்லூரி, நடிகர் ஒன்றியம், அவைக்காற்றுகலைக் கழகம், திருமறைக் கலாமன்றம், அரங்க செயற்பாட்டுக்குழு போன்ற நிறுவனங்களின் பணிகள் குறிப்பிடப்பெறுதல்.

தேசிய கலைவடிவம் தொடர்பான விழிப்புணர்வுகள் போன்றவை பற்றி சுருக்கமாகக் குறிப்பிட்டிருப்பது எதிர்பார்க்கப் பெறுகின்றது .

(15 புள்ளிகள்)

06. மேல்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு வரைக

i. சரச்சந்திராவின் அரங்கப் பணிகள்
- கண்டி பேரதெனிய பல்கலைக்கழகத்தில் சிங்களப் பிறிவு பேராசிரியராகக் கடமையாற்றினார்
- ஆரம்பத்தில் ஜாதகக் கதைகள் , தழுவிய நாடகம் வேற்றுமொழி நாடகம், நாட்டார் புராணக் கதை நாடகம் என நாடகங்களைத் தயாரித்தார்.
- சுய ஆக்க நாடகங்களையும் மேடையேற்றினார்.
- சிங்கள மக்களிடையே காணப்படும் பாரம்பரிய அரங்குகளுடன் தெருக்கூத்து, கதகளி ஆகிய நாடக மரபுகளையும் உள்ளடக்கித் தமக்கெனத் தனித்துவமான நாடகங்களைப் படைத்தார்.
- 1952ல் பபாவதி என்ற நாடகத் தயாரிப்புடன் புதிய தேடல் ஆரம்பமாகிறது.
- நாடக வடிவினை உள்வாங்கி மனமே சிங்ஹபாஹுவைத் தந்தார்
- சிங்கள நாடகச் செழுமைக்காக முன்வைத்தவை கிரேக்கத்தில் பயன்படுத்திய கோரசை மனமே சிங்ஹபாஹுவில் வெளிப்படுத்தினார்.
- பொத்தே குருவை அறிமுகம் செய்தார்.

- கொடுரே குணங்களை விடுத்து, மனிதாபிமான பாத்திரங்களைப் படைத்தார்.
- பலவகையான இசைக்கருவிகளைப் பயன்படுததினார்
- உடை, ஒப்பனை, ஒளி என்பவற்றில் நவீனத்துவத்தினை புகுத்தினார்
- புரோசீனியம் அரங்கைக் கொண்டு வந்தார். **(05 புள்ளிகள்)**

ii. **பார்ஸி நாடக மரபு**

- 18 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு அறிமுகமாகி இன்று வரையில் பயில்நிலையில் உள்ள அரங்கு
- இசை நாடகம், ஸ்பெஷல் நாடகம் , அண்ணாவி மரபு நாடகம், கொட்டகைக் கூத்து எனவும்

அழைக்கப்படும்

- நாட்டுக்கோட்டைச் செட்டிமாரினால் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொழில் முறை நாடகக் குழுக்களின் மூலம் அறிமுகம்.
- வி.வி. வைரமுத்து தனித்துவம் மிக்க கலைஞராதலுடன் அவரைத் தொடர்ந்து தைரியநாதன் இரத்தினம்,செல்வம் ஈடுபடல்
- இம்மரபு அறிமுகம் செய்த புதிய விடயங்கள் .
  - படச்சட்ட மேடை
  - கொட்டகை அரங்குகள்
  - வர்ணம் தீட்டப்பட்ட காட்சித் திரைகள்
  - வாயு விளக்குகள்
  - பாடுதலும் நடித்தலும்
  - கவர்ச்சியான உடைகள்
  - ஹார்மோனியம்
  - நேரச் சுருக்கம்
  - பணம் கொடுத்து நாடகம் பார்த்தல்

**(05 புள்ளிகள்)**

iii. தெருவெளி அரங்கு

- குறுகிய நேரத்தில் சமூக விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டு தெருவெளியில் ஆற்றுகை செய்யப்படும் அரங்க வடிவம்

தெருவெளி அரங்கின் பண்புகள்

- குறுகிய நேரத்தைக் கொண்டது.
- விழிப்புணர்வை அடிப்படையாகக் கொண்டது
- தெருவளியில் ஆற்றுகை செய்யப்படுவது.
- மக்களை விரைவாக பங்காளர்களாக மாற்றுவது.
- சமூக பிரக்ஞை உள்ள நடிகர்கள் ஆற்றுகையாளராகச் செயற்படுவார்.
- மக்களை, பொதுநோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அணிதிரட்டும் செயற்பாட்டைக் கொண்டது.

**(05 புள்ளிகள்)**



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

iV. கலையரசின் நாடக முறைமை

- ஈழத்தின் நவீன இயற்பண்பு நாடகமரபின் தந்தை
- லங்கா சுபோத விலாசபை ஊடாக நாடகங்களைத் தயாரித்தார்
- பம்மல் சம்மந்த முதலியாரின் நாடகங்களினால் பெரிதும் கவரப்பட்டவர்
- அவரது நாடகங்களான மனோகரா, சாரங்கதாரா , வாணிபுரத்து வணிகன் போன்ற நாடகங்களை ஈழப்பார்வையாளருக்கு அறிமுகம் செய்தார்.
- பாத்திர வார்ப்பிலும் , இயற்பண்பு நடிப்பிலும் மிகவும் கரிசனையாக இருந்தார்.
- ஒளி அமைப்பில் விஷேட கவனம் செலுத்தினார்.
- பாத்திர வார்ப்பிலும் , இயற்பண்பு நடிப்பிலும் மிகவும் கரிசனையாக இருந்தார்.
- சொல்லாடல் மரபின் அறிமுகம்
- நடிப்பில் கொண்டுவந்த மாற்றங்கள்.
- இயற்பண்புசார்ந்த காட்சியமைப்பின் அறிமுகம் **(05 புள்ளிகள்)**

V. கபுக்கி அரங்கு

- கபுக்கி நாடக மரபு அன்றேல் கபுக்கி அரங்க வெளி பற்றி விளக்கியிருப்பின் புள்ளி வழங்கலாம்.

கபுக்கி நாடக மரபு

- மகிழ்வுட்டு வடிவம், அரச பரம்பரையினக்குரிய வடிவம்
- ஒக்குணியால் வடிவமைக்கப் பெற்றது.
- ஆடல் பாடல் நடிப்பினை உள்ளடக்கியது.
- சாஸ்திரிய மயப்படுத்தப் பெற்றது.
- பிரகாசமான மேடைக்காட்சி ,ஆடம்பரமான மேடைகள், பரந்த மேடை ,மிகைப்பாட்டு நாடகத் தன்மை
- பெருங்காட்சிப்பண்பு
- கலை நுட்பம் வாய்ந்த நடிகர் போன்ற முக்கிய 05 விடயங்கள் கூறியிருப்பின் 05 புள்ளிகள் வழங்கலாம்

கபுக்கிஅரங்கவெளி

ஆற்றுகை வெளியின் அளவு.
பார்போர் கூடம்
பூம்பாதை (கனாமிச்சி)
சுழல் மேடை
பல்வேறு திரைப் பயன்பாடு

**(போன்ற விடயங்கள் விளக்கியிருந்தாலும் 05 புள்ளிகள் வழங்கலாம்)**

**(05 புள்ளிகள்)**

**(மொத்தம் 15 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI
(35) WWW.PastPapers.WiKi (35)




2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO




2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO




2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO




2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO




2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO




2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO




2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO




2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO




2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO




2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


**LOL STORE PVT LTD** Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments
KOKO
CASH ON DELIVERY
VISA